DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 1438/2022

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.பெத்தம்மாள் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 absent. Petition U/s 317 Cr.P.C filed through E-filing and allowed)
12.04.2025 – 12.05 PM
சாட்சியை நிலைய பெண் காவலர்-1451 அவர்கள் அடையாளம் காட்டினார்.
<u>முதல் விசாரணை</u>

1. நான் இராணிசேதுபுரம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் பெருநாழியைச் சேர்ந்தவர்கள். எங்கள் ஊருக்கு அடிக்கடி வந்து செல்வதால் எனக்கு தெரியும். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது.

2. நான் குடியிருந்து வரும் இடத்திற்கு பெருநாழியைச் சேர்ந்த ஒரு நபர் உரிமை இருப்பதாக சொல்லி வந்தார். எனக்கு பாத்தியப்பட்ட இடத்தை பெருநாழியைச் சேர்ந்த ஒரு நபர் எழுதிக் கொடுத்துவிட்டதாக முத்துமுருகன் என்பவர் சொன்னார். அதனால் என்னை இடத்தை காலி செய்யுமாறு சொன்னார். அதற்கு நான் கடந்த 93 ஆண்டுகளாக அனுபவம் செய்து அந்த இடத்தில் வசித்து வருவதாக கூறினேன். அதனால் நான் இடத்தை காலி செய்ய முடியாது என்று சொல்லி விட்டேன்.

3. கடந்த 15.08.2022 ம் தேதியன்று காலை வேலைக்கு சென்றுவிட்டு மாலை 05.00 மணியளவில் வீட்டிற்கு வந்தேன். முத்துமுருகன் மற்றும் இரண்டு நபர்கள் வந்தார்கள். எங்கள் ஊரைச் சேர்ந்த வயதான பெண்மணி ஒருவர் அலறி அழுதார். அவரால் வாய் பேச

முடியாது. கை ஜாடை செய்தார். நான் பார்த்தபோது JCB யை வைத்து முத்துமுருகன் எனது வீட்டை இடித்து கொண்டிருந்தார். நான் எனது வீட்டை இடிக்கிறீர்கள் என்று கேட்ட போது முத்துமுருகன் என்னை கீழே தள்ளிவிட்டார்.

4. நான் கீழே விழுந்ததில் கீழே கிடந்த குச்சி ஒன்று எனது காலில் இடித்துவிட்டது. அதனால் எனக்கு காயம்பட்டது. பின்னர் எனது வீட்டை இடித்துவிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள்.

5. பின்னர் சம்பவம் குறித்து சென்னையில் உள்ள எனது தங்கை பாலின்ராணி என்பவருக்கு தகவல் தெரிவித்தேன். எனது தங்கை காலையில் ஊருக்கு வந்தார். எனது தங்கையை அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u> இல்லை.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.